# 10th Tamil – Revision Test - Model Question Paper

வகுப்பு:10. மதிப்பெண்:100

பாடம்: தமிழ். காலம்:3.00

பகுதி - I

I.பலவுள் தெரிக: 15×1=15

1.'காய்ந்த இலையும் காய்ந்த தோகையும் 'நிலத்துக்கு நல்ல உரங்கள் இத்தொடரில் குறிப்பிடுவது.

அ) இலையும் சருகும் ஆ) தோகையும் சண்டும் இ) தாளும் ஓலையும் ஈ) சருகும் சண்டும்

2. பாரதியார் காற்றை 'மயலுறுத்து' அழைப்பதை குறிக்கும் சொற்றொடர்-

அ) மணம் வீசும் காற்றாய் நீ வா ஆ) மனதை மயங்கச் செய்யும் மணத்தோடு நீ வா இ) மயிலாடும் காற்றாய் வா ஈ) மகரந்தம் சுமந்து கொண்டு நீ வா

3.அறிஞருக்கு நூல், அறிஞரது நூல் ஆகிய சொற்றொடர்களில் பொருளை வேறுபடுத்த காரணமாக அமைவது.

அ) வேற்றுமை உருபு ஆ)எழுவாய்இ) உவம உருபு ஈ) உரிச்சொல்

4. 'உனதருளே பார்ப்பன் அடியேனே'-யாரிடம் யார் கூறியது?

அ) குலசேகராழ்வாரிடம் இறைவன் ஆ) இறைவனிடம் குலசேகராழ்வார் இ) மருத்துவரிடம் நோயாளி ஈ) நோயாளியிடம் மருத்துவர்

5. அருந்துணை என்பதை பிரித்தால்-------------------

அ) அருமை + துணை ஆ) அரு+துணை இ)அருமை+துணை ஈ)அரு+இணை

6. தோண்டும் அளவு ஊரறும் நீர்போல கற்கும் அளவு அறிவு சுரக்கும் என்கிறது----

அ) நற்றிணை ஆ) குறுந்தொகை இ) திருக்குறள் ஈ) கலித்தொகை

7. கோசல நாட்டில் கொடை இல்லாத காரணம் என்ன?

அ) நல்ல உள்ளம் உடையவர்கள் இல்லாததால் ஆ) ஊரில் விளைச்சல் இல்லாததால் இ) அரசன் கொடுங்கோல் ஆட்சி புரிவதால் ஈ) அங்கு வறுமை இல்லாததால்

8. முல்லை நில மக்களின் உணவுப் பொருள்கள்-------------

அ) வெண்நெல் வரகு  ஆ) மலைநெல் ,தினை இ)வரகு சாமை.   ஈ)மீன்,செந்நெல்

9. தமிழினத்தை ஒன்றுபடுத்தும் இலக்கியமாக மா. பொ. சி கருதியது .

அ) திருக்குறள் ஆ) புறநானூறு இ) கம்பராமாயணம் ஈ) சிலப்பதிகாரம்

10. சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் அமைந்த பாவினம் -----------

அ) அகவற்பா ஆ) வெண்பா இ) வஞ்சிப்பா ஈ) கலிப்பா

11. சுதந்திர இந்தியாவின் மகத்தான சாதனையும் சவாலுமாக ஜெயகாந்தன் கருதுவது.

அ) அரசின் நலத் திட்டங்களை செயல்படுத்தல் ஆ) பெற்ற சுதந்திரத்தை பேணி காத்தல் இ) அறிவியல் முன்னேற்றம். ஈ) வெளிநாட்டு முதலீடுகள்

பாடலைப் பார்த்து பின் வரும் வினாக்களுக்கு (12,13,14,15) விடை தருக.

தென்னன் மகளே!  திருக்குறளின் மாண்புகழே!

இன்னறும் பாப்பத்தே !எண்தொகையே! நற்கணக்கே!

மன்னுஞ்சிலம்பே! மணிமே கலைவடிவே!

முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!

12.இப்பாடலின் ஆசிரியர் யார்?அ) பாரதியார் ஆ) பாரதிதாசன் இ)முடியரசன்.

ஈ) பெருஞ்சித்திரனார்

13. இப்பாடலில் இடம் பெற்றுள்ள கவிதை தொகுப்பின் பெயர் யாது?

அ) மலரும் மாலையும் ஆ) பாஞ்சாலி சபதம் இ) கனிச்சாறு ஈ) கொடி முல்லை

14. 'என்தொகையே' என்பதன் பொருள் யாது?

அ) பத்துப்பாட்டு ஆ) எட்டுத்தொகை.இ) சிலப்பதிகாரம் ஈ) மணிமேகலை

15. பாடலில் இடம்பெற்றுள்ள அடி எதுகைச் சொற்களை குறிப்பிடுக.

அ) தென்னன்,இன்னறும் ஆ) மற்றும்,மணிமேகலை இ) முன்னும்,முடித்தாள்

ஈ) தென்னன், திருக்குறள்         பகுதி-II

II. எவையேனும் நான்கு நாட்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க.  4×2=8

## பிரிவு -1

(21 -ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும். )

16. விடைக்கேற்ற வினாக்கள்  அமைக்க.

அ) சொல்ல ஆராய்ச்சியில் பாவாணரும் வியந்த பெருமகனார் தமிழ்த்திரு இரா .இளங்குமரனார்.

ஆ) உலகத்திலேயே தமிழ் மொழிக்காக உலக மாநாடு நடத்திய முதல் நாடு மலேசியா.

17. வசன கவிதை- குறிப்பு வரைக.

18. மருத்துவத்தில் மருந்துடன் அன்பும் நம்பிக்கையும் ஆற்றும் பாங்கினை எழுதுக.

19. நான் எழுதுவதற்கு ஒரு தூண்டுதலும் அதற்குரிய காரணமும் உண்டு- இத்தொடரை இரு தொடர்களாக்குக.

20 .தஞ்சம் எளியர் பகைக்கு- இவ்வடி குறிய அசைகளையும் வாய்பாடுகளையும் எழுதுக.

21.'எப்பொருள்' - எனத். தொடங்கும் குறளை எழுதுக.

## பிரிவு-2

எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடைகள் தருக. 5×2=10

22. தீவக அணியின் வகைகள் யாவை?

23. சொற்களின் கூட்டப் பெயர்களைக் கண்டுபிடித்து எழுதுக.

அ) பழம் ஆ) ஆடு

24. இரு சொற்களையும் ஒரே தொடரில் அமைத்து எழுதுக.

அ) விடு-வீடு ஆ) சிலை-சீலை

25. தொழில் பெயர்களின் பொருளை முழுமை செய்க.

அ) பசுமையான------ஐக் ------கண்ணுக்கு நல்லது.

ஆ) பொதுவாழ்வில்-------கூடாது.-------இல் அவரை மிஞ்ச ஆள் இல்லை.

26.கலைச்சொல அறிவோம்:

அ) Emblem.    ஆ) Thesis

27.பிறமொழிச் சொற்களை தமிழ்ச்சொற்களாக மாற்றி எழுதுக

அ) உங்களிடம் உள்ள ஒரு தராசை இரு முறைகள் மட்டுமே யூஸ் பண்ணி வெயிட்    குறைந்த கோல்டு பிஸ்கட்டைக் கண்டுபிடிக்கவும்.

28.ஊர்ப்பெயர்களின் மரூவை எழுதுக:

அ) உதகமண்டலம்    ஆ) கோயம்புத்தூர்.

பகுதி - III

ஏதேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க.    2×3=6

29.புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது-இளம்பயிர் வகை ஐந்தின் பெயர்களைத் தொடர்களில் அமைக்க.

30".கேலகய  பகா டுஂேே னும் கேலநககர  காப்போம்  கேலநககர காப்போம் " -இடம் சுட்டி பொருள் விளக்குக.

31.அம்மானைப் பாடத் கள், சித்தர் பாடத் கள் ,சொற்பொழிவுகள் போன்றவற்றின்மூதம ாக நான்இதக் கிய அறிவு பெற்றேன். அப்போது அவர்கள் வெளியிடும்சிறந்த கருத்துக்களை ஏடுகளித் குறித் து வைத் துக் கொள்வேன். யான் முறையாக ஏட்டுக் கத் வி பெற இயதா மத் போனதா த் ஏற்பட்ட இதப் பை ஈடுசெய்ய கேள்வி ஞானத்தை பபறுவதிலேதய மிகுந்த ஆர்வம் க ாட்டினேன். எனது தக ள்வி ஞானத்க த பபருகிய பபருக ம திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் அடிக ள் அதிக ம் உண்டு என்பறல்லாம் தமது பசவிச்பசல்வம் பற்றி மா .பொ. சிவஞானம் குறிப்பிட்டுள்ளார்.

அ) மா. பொ .சி அவர்கள் கேள்வி ஞானத்தை அதிகமாக யாரிடம் பெற்றதாக குறிப்பிடுகிறார்?

ஆ) மா .பொ. சி அவர்கள் இலக்கிய அறிவினை எவ்வாறு பெற்றார்?

இ) ஏட்டுக் கல்வி பெற இயலாத மா.பொ.சி அதனை எவ்வாறு ஈடு செய்தார்?

ஏதேனும் இரண்டு வினாக்களுக்கும் மட்டும் விடையளிக்க.    2×3=6

(34 ஆவது வினா கட்டாயம் விடை அளிக்கவும்.)

32. தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாக பாவலரேறு சுட்டுவன யாவை?

33." மாளாத காதல் நோயாளன் போல்" என்னும் தொடரில் உள்ள ஊமையை சுட்டும் செய்தியை விளக்குக.

34.அ) அருளைப் பெருக்கி-என்னும் நீதி வெண்பா பாடல்.(அல்லது)

ஆ) தண்டலை மயில்க ளாடத்-என்னும் கம்பராமாயணப் பாடல்.

ஏதேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளி. 2×3=6

35. ஆசிரியப்பாவின் பொது இலக்கணத்தை எழுதுக.

36. அஞ்சும் அறியான் அமைவிலன் ஈகலான்

தஞ்சம் எளியன் பகைக்கு- அலகிட்டு வாய்பாடு தருக.

37.கவிஞர் தாம் கூற விரும்பும் கருத்துக்கு ஏற்றவாறு தற்குறிப்பேற்ற அணி அமைவதை எடுத்துக்காட்டுக.

பகுதி-IV

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க. 5×5=25

38.அ)மனோன்மணீயம் சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலையும் பெருஞ்சித்திரனாரின் தமிழ் வாழ்த்தையும் ஒப்பிட்டு மேடைப்பேச்சு ஒன்றை உருவாக்குக. ( அல்லது)

ஆ)சிலப்பதிகாரம் மருவூர்ப்பாக்கம் வணிக வீதிகளை இக்கால வணிக வளாகங்களோடும் அங்காடிகளோடும் ஒப்பிட்டு எழுதுக.

39.அ) உணவு பாதுகாப்பு ஆணையருக்கு கடிதம் ஒன்று எழுதுக.(அல்லது)

ஆ)உங்கள் தெருவில் மின் விளக்குகள் பழுதடைந்துள்ளதை மின்வாரிய அலுவலகத்துக்கு கடிதம் ஒன்று எழுதுக.

40. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.

41. மேல்நிலை வகுப்பு -சேர்க்கை விண்ணப்பம்.

42.1. அ)Education is what remins after one has forgotten what one has learned in school-Albert Einstein.

ஆ) Tomorrow is often the busiest day of the week-Spanish Proverb.

இ) It is during our darkest moments that we must focus to see the light-Aristotle.

ஈ) success is not final, failure is not fatal. It is the courage to to continue that counts-Winston Churchill.

உ) Language is the road map of a culture- Rita Mae Brown. ( அல்லது)

2. நிற்க அதற்குத் தக :1. இன்சொல் வழி 2. தீய சொல் வழி. (இதில் நீங்கள் செல்லும் வழி யாது? உங்கள் நண்பருக்கு காட்டும் வழி யாது?

பகுதி- V

அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளி: 3×8=24

43.அ)தமிழின் சொல்வளம் பற்றியும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரை குறிப்புகளை எழுதுக.(அல்லது)

ஆ) "மாணவப் பருவமும் நாட்டுப்பற்றும் "என்ற தலைப்பில் மேடை உரை எழுத ுக.

44.அ)அன்னமய்யா என்னும் பெயருக்கும் அவரின் செயலுக்கும் உள்ள பொருத்த பாட்டினை "கோபல்லபுரத்து மக்கள் "கதை பகுதி கொண்டு விவரிக்க. (அல்லது)

ஆ)'அழகிரிசாமியின்' ஒருவன் இருக்கிறான் 'சிறுகதையில் மனிதத்தை வெளிப்படுத்தும் கதைமாந்தர் குறித்து எழுதுக.

45.அ) 'சான்றோர் வளர்த்த தமிழ்' என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக. (அல்லது)

ஆ)உங்கள் பகுதியில் நடைபெற்ற அரசு பொருட்காட்சி சென்று வந்த நிகழ்வை கட்டுரையாக்குக. (முன்னுரை-இனிய காட்சி-பல்துறை அரங்குகள்-விளையாட்டு அரங்குகள்-உணவு அரங்குகள்-விளையாட்டுப் பொருட்கள்-முடிவுரை).

தமிழ் வாழ்க! தமிழ் வாழ்க!

Prepared by,

ஸ்ரீ ராமகிருஷ்ணா மெட்ரிகுலேஷன் மேல்நிலைப்பள்ளி.N.நாரையூர்.வேப்பபூர்.